**தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையர் அவர்களின்**
**செயல் முறை ஆணை, சென்னை – 18.**

**முன்னிலை : திரு. ம. ரா. மோகன், இ.ஆ.ப., (ஓய்வு)**
**ஆணையர்.**

**ந.க.2202/2014/கூ.தே.1** **நாள் : 05 .01.2015**

பொருள் : கூட்டுறவுத் தேர்தல் – சென்னை மாவட்டம் பொதுப்பணித்துறை பணியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் – தலைவர் தேர்தல் நடத்துதல்– தேர்தல் திட்டம் – அறிவிப்பு – தொடர்பாக.

பார்வை : கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் / மாநிலத் தேர்தல் அலுவலரின் கடிதம் கா.மு.59/2014/கூ.தே.1 நாள்:19.12.2014.

****

**ஆணை:**

பார்வையில் காணும் கடிதத்தில் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர்/மாநிலத் தேர்தல் அலுவலரால் அனுப்பப்பட்ட கருத்துருக்கள் பரிசீலிக்கப்பட்டன. சென்னை மண்டலம், துணைப்பதிவாளர் (கடன்) / மாவட்ட தேர்தல் அலுவலரின் கட்டுப்பாட்டில் செயல்படும் பொதுப்பணித் துறை பணியாளர் கூட்டுறவுச் சங்க தலைவரை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் திட்டம் 1988 ஆம் வருட தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகளில் விதி எண்.52(5)–ன் கீழ் பின்வருமாறு வகுக்கப்பட்டு தொடர்புறுத்தப்படுகிறது.

**<u>தேர்தல் திட்டம்</u>**

| வ.எண். | திட்டம் | நாள் |
|---|---|---|
| 1. | மாவட்ட தேர்தல் அலுவலரால் தேர்தல் அலுவலர் நியமனம் செய்யப்படவேண்டிய நாள் : (விதி.எண்.53 1 (a)ன்படி) | 21.1.2015 |
| 2. | தேர்தல் அலுவலர், தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நிர்வாகக் குழு உறுப்பினர்களின் கூட்டத்தை கூட்ட அறிவிப்பு அனுப்பவேண்டிய நாள் : ( விதி எண்.53 3 (a)ன்படி) | 27.1.2015 |
| 3. | தலைவரை தேர்ந்தெடுக்க நிர்வாகக்குழு உறுப்பினர்களின் கூட்டம் நடத்தப்படவேண்டிய நாள் : (விதி எண்.53 4(a)ன்படி) | **2.2.2015** **காலை : 10.00 மணி** |

-2-

2) 1988ஆம் வருடத்திய தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகளில் விதி.எண்.53ல் சொல்லப்பட்டுள்ள விதிமுறைகளைப் பின்பற்றியும், இவ்வாணையத்தால் தொடர்புறுத்தப்பட்டுள்ள சுற்றறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுரைகளையும், தேர்தல் திட்ட கால வரையறைகளையும் பின்பற்றி இச்சங்கத்தின் தலைவர் தேர்தலை நடத்தி முடிக்க மாநிலத் தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்டத் தேர்தல் அலுவலருக்கு அனுமதி அளித்து ஆணையிடப்படுகிறது.

(ஒம்./–)
ஆணையர்

பெறுதல் :

1. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் / மாநிலத் தேர்தல் அலுவலர்.
2. துணைப்பதிவாளர் (கடன்), சென்னை / மாவட்ட தேர்தல் அலுவலர்.

நகல்:

3. மண்டல கூடுதல் பதிவாளர் / சென்னை மண்டலம், சென்னை–18.